சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS No 128/2021

28.11.2024

**வா.சா.1 அருண்மொழி க/பெ. புகழேந்தி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார் .**

அசல் வழக்கு 128/2021 வழக்கை பயிர்காப்பீட்டு திட்டத்தில் உள்ள பணம் வேண்டும் என்று தாக்கல்செய்துள்ளேன். அதில் எத்தனை அயிட்ட சொத்துகளை இந்த வழக்கில் காட்டியுள்ளேன் என்று தெரியாது. சர்வே எண் தெரியாது. எனது தகப்பனாருக்கு மொத்தம் இரண்டுதாரம். நான் இரண்டாம்தாரத்திற்கு பிறந்த மகள் ஆவேன். எனது தாயார் பெயர் பிச்சைமணி. அவர் இறந்துவிட்டார். எனது தகப்னாரின் முதல் மனைவி பெயர் அம்பிகாம்மாள் அவர் தற்போது வரை உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் முதல் மனைவி உயிருடன் உள்ளபோதே என் தாயாருடன் சேர்ந்து வாழ்ந்து வந்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் என் தாயாரை திருமணம் செய்து வாழ்ந்துவந்தார். முதல் மனைவி உயிருடன் உள்ளபோதே என் தாயாரை திருமணம் செய்துகொண்டதால் அந்த திருமண அந்தஸ்து செல்லாது என்றாலும் சேர்ந்து வாழ்ந்து வந்ததாகதான் அர்த்தமாகும் என்றாலும் சரியல்ல. முதல் மனைவிக்கு காது கேட்காது என்பதால் இரண்டாவதாக எனது அம்மாவை திருமணம் செய்துகொண்டார். எனது தகப்பனார் மாரியப்பவள்ளாலதேவர் அம்பிகாம்மாளின் ஆட்சேபணையை எதிர்த்து என்னுடைய தாயாரை திருமணம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் கல்லூரி படித்து முடிக்கும் வரை அனைவரும் ஒன்றாகதான் இருந்தோம். என்னுடைய தாயாரும் அம்பிகாமாலும் எனது தகப்பனாரோடு சேர்ந்து வாழ்ந்துவந்ததாக நான் பொய்யாக தெரிவிக்கிறேன் என்றாலும் அம்பிகாம்மாள் தனியாகவும் எனது தாயார் தனியாகவும் தான் குடும்பம் நடத்திவந்தார் என்றால் அது தவறாகும். என் தகப்பனாரும் அவருடைய இரு மனைவிகளும் ஒன்றாக தான் வாழ்ந்துவந்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அவர்கள் எந்த காலத்திலும் சேர்ந்து வாழவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அம்பிகாம்மாளின் வாரிசுகள் யார் என்றால் சிவகலை , மோகன்தாஸ் , யோகானந்தம் , லெட்சுமி (எ) ஜான்சிராணி ஆவார்கள். ஜான்சிராணி என்பவர் சிவாஜி என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. ஜான்சிராணி திருமணம் ஆகாமல் தான் இறந்ததாக எங்களிடம் அவருடை உடல் கொண்டுவந்தபோது எனது தகப்பனார் தான் கொல்லிவைத்தார். எப்போது இறந்தார் என்றால் எனது தகப்பனார் 2008 ல் இறந்தார் அவர் இறப்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு ஜான்சிராணி இறந்தார். ஜான்சி ராணிக்கும் சிவாஜிக்கும் திருமணமாகி சிவமதி என்ற ஒரு மகள் உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. ஜான்சிராணி ஒரு மகளை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் திருமணம் ஆகாமல் தான் இறந்தார். என்னுடைய தாயாருக்கு பிறந்த குழந்தைகள் யார் யார் என்றால் நான், ரவிந்திரன் , செந்தமிழ்செல்வி , ே ஹமாவதி , குமார் , சித்தரகலா, செந்தில்குமாரி ஆகியோர்கள் ஆவார்கள். இரவிந்திரன் இறந்துவிட்டார் அவருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் அவர் மனைவி பேபி

குழந்தைகள் ரேஷ்மா , தேவேந்திரன் ஆவார்கள். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது சொத்துகளை பிரித்து கொடுத்தாரா என்றால் இருந்த சொத்துகளை மட்டும் அவருடை மனைவிகள் அம்பிகா மற்றும் எனது தாயாருக்கும் அவரவர் வாரிசுகளுக்கும் சேர்த்து தல 7 மா வாய்மொழியாக பிரித்துகொடுத்தார். அப்படி எங்களுக்கு கிடைத்த சொத்தின் சர்வே எண் என்ன என்று கேட்டால் எனக்கு தெரியாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் பட்டா எண் 769 ல் எனக்கு, சிவகலை , செந்தமிழ்செல்வி , ேஹமாவதி , சித்தரகலா, செந்தில்குமாரி லெட்சுமி ஆகிய 7 நபர்களுக்கும் 1ெ ஹக்டர் 38 ஏர்ஸ் யை எனது தகப்பனார் வாய்மொழியாக பிரித்துகொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு இரண்டுதாரம் இருப்பதால் பிரச்சனை எதுவும் வரக்கூடாது என்பதால் பெண் மக்களுக்கு மட்டும் சர்வே எண் 484/1 B ல் மேற்சொன்ன 1 ெஹக்டர் 38 ஏர்ஸ் யை பிரித்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு 1ெஹக்டர் 38 ஏர்ஸ் யை எல்லோரும் அனுபவித்ததில் பிரச்சனை ஏற்பட்டதால் மோகன்தாஸ் என்பவருக்கு குத்தகை சாகுபடிக்கு நாங்கள் விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. அவரே குத்தகைக்கு எடுத்துவிட்டார் அதனால் காவல்நிலையத்தில் புகார் அளித்தோம் . எனது கணவர் காவல்துறையில் பணியாற்றினார் என்றால் சரிதான். எனது தகப்பனார் நல்லெண்ணத்தில் அடிப்படையில் பிரித்துகொடுத்தார் என்றும் அந்த சொத்தைதான் மோகன்தாஸ்க்கு குத்தகைக்கு கொடுத்தார் என்றும் அந்த குத்தகையை குத்தகைக்கு எடுத்தபிறகு பொங்கல் , தீபாவளிக்கு பணமாக கொடுத்தார் என்றால் சரியல்ல. அரிசியாகவும் கொடுப்பார் என்றால் சரியல்ல. நெருங்கிய உறவு என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோகன்தாஸ் எதுவும் செய்யவில்லை . நாங்கள் தான் செய்து வந்தோம். இன்று வரை மோகன்தாஸ் எங்களுக்கு உறவுமுறையை அனுசரித்து நல்லபடியாக தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. இரவிந்திரனின் நிலத்தை அவர் மகன் தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் UDR பட்டாவில் பெயர் மாற்றம் வந்ததை காரணமாக வைத்து சாகுபடி செய்து வருகிறார்.

**(1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.28 19:21:54 +0530

சார்பு நீதிபதி ,

மன்னார்குடி.